**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 12.11.2025**
**OS. No. 99/2018**
**வழக்கு சாட்சி PW.1–வேணு , த/பெ. கலைகோவன்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

1, 2 **பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

5) என் தகப்பனார் தாவா சொத்தை எந்த வருடம் அளந்தார் என்றால் 2015 ல் அளந்தார், அதன் பிறகு 2018 ல் அளக்க முற்பட்ட போது பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவித்ததால் அளக்க இயலவில்லை. தாவா சொத்தில் 1, 2 பிரதிவாதியால் 1 சென்ட் நிலம் ஆக்கிரமிப்பு செய்ததாக பொய்யாக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தை அளப்பதற்காக எவ்வித ஆட்சேபனையும் தற்போது வரை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. ராஜாராம் என்பவர் மற்ற நிலங்களை யார் யாருக்கு எவ்வளவு விற்றுள்ளார் என்றால் நாங்கள் வாங்கியது போக 6, 7 நபர்களுக்கு விற்றுள்ளார், அந்த சொத்துக்களின் விவரங்கள் எனக்கு குறிப்பாக தெரியவில்லை.

6) 1, 2 பிரதிவாதிகள் அவர்களது நிலங்களை எப்போது வீட்டு மனைகளாக பிரிக்க முயற்சி செய்தார்கள் என்றால் 2018 ல் முயற்சி செய்தார். எந்த தேதியில் 1, 2 பிரதிவாதிகள் ஜலகண்டாபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சொத்துக்களை விற்பதற்கு பதிவு செய்ய முற்பட்டார்கள் என்றால் தேதி குறிப்பாக தெரியாது. 2018 ல் தான் 13 ம் பிரதிவாதியான உதவி செயற்பொறியாளர் மூலம் தாவா சொத்தின் நடு பகுதியில் மின் கம்பம் நட முயற்சி செய்தார்கள், தேதி, மாதம் தெரியவில்லை. 1, 2 பிரதிவாதிகள் 10, 11 பிரதிவாதிகளிடம் தங்கள் நிலத்தை வீட்டு மனையாக அங்கீகாரம் பெற முயற்சித்ததாக நான் சொல்லியுள்ளது எந்த தேதி மாதம் என்றால், 2018 ம் வருடம் ஆகும், மாதம், தேதி நினைவில்லை.

7) என் தந்தை 1, 2 பிரதிவாதிகளிடம் தாவா சொத்து சம்மந்தமாக யார் முன்னிலையில் பஞ்சாயத்து பேசினார் என்றால் அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. 2018 ஆகஸ்டு மாதத்தில் எங்கள் ஊரிலுள்ளவர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசப்பட்டது. 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தின் மேற்கு புறத்தில் கட்டிடம் கட்ட முயற்சி செய்ததாக நாங்கள் பொய்யாக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. என் தந்தைக்கு நிலத்தை விற்பனை செய்த ராஜாராம் மற்றும் அவரது மனை பழனியம்மாள் ஆகியோர்கள் தாவா சொத்திலுள்ள மற்ற சொத்துக்களை 2004 முதல் 2011 காலகட்டத்திலேயே விற்றுவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. என் தந்தை ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அதிகாரி என்றால் சரிதான்.

8) 2012ம் வருடம் என் தந்தை ராஜாராம் என்பவர் பெயரில் பொய்யான கிரைய பத்திரம் தயாரித்து தன் செல்வாக்கை பயன்படுத்தி பதிவு செய்து பட்டா பெற்றுள்ளார் எ ன்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவாவில் சொல்லியுள்ளவாறு என் தகப்பனாருக்கு அந்த இடத்தில நிலம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நாங்க  இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் பொய்யானது என்றும், அதன் அடிப்பபடையில் எங்களால் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றும், அதனால் என் தகப்பனார் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.